பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

05 12 2025 6 45

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியா-ரஷ்யா உச்சி மாநாட்டையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி - அதிபர் திரு புதின் ஆகியோர் இன்று புதுதில்லியில் சந்தித்துப் பேசுகின்றனர்.
- நாடு முழுவதும் இண்டிகோ நிறுவனம் உடனடியாக விமான சேவையை இயல்பு நிலைக்கு கொண்டுவர வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
- திருப்பரங்குன்றம் தீபத் தூணில் விளக்கு ஏற்ற வேண்டும் என்ற சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பு, வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.
- பண்ருட்டி முந்திரி, புளியங்குடி எலுமிச்சை உள்ளிட்ட 9 வேளாண் பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
- சென்னை சர்வதேச ஸ்குவாஷ் மகளிர் பிரிவு இறுதிப் போட்டியில் ஜோஷ்னா சின்னப்பா இன்று அனஹத் சிங்கை எதிர்கொள்கிறார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா-ரஷ்யா உச்சி மாநாட்டையொட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி - அதிபர் திரு புதின் ஆகியோர் இன்று புதுதில்லியில் சந்தித்துப் பேசுகின்றனர்.

இரு நாடுகளுக்கிடையே "உத்திசார் ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஏற்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் கடந்த 11 ஆண்டுகளில், பிரதமர் திரு. மோடியும், அதிபர் திரு. புதினும் இதுவரை 19 முறை சந்தித்துள்ளனர்.

ஆண்டு உச்சி மாநாடு என்பது இரு நாடுகளுக்கும் இடையேயான மிக உயர்ந்த பேச்சுவார்த்தையாகும்.

அப்போது இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை இருவரும் மறுஆய்வு செய்வதுடன், பரஸ்பர ஆர்வம் கொண்ட மண்டல மற்றும் உலகளாவிய விவகாரங்கள் குறித்தும் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவுள்ளனர்.

இந்த பேச்சுவார்த்தையின் முடிவில் வர்த்தகம், பொருளாதாரம், சுகாதாரம், கல்வி, கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக இன்று காலை ரஷ்ய அதிபருக்கு  குடியரசுத்தலைவர் மாளிகையில் பாரம்பரிய முறைப்படியான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

அதைத் தொடர்ந்து அவர் ராஜ்காட்டில் மகாத்மா காந்திக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தவுள்ளார்.

இன்று மாலை, குடியரசுத் தலைவர்திருமதி திரௌபதி முர்மு  ரஷ்ய அதிபரை வரவேற்று அவருக்கு விருந்து அளிக்கவுள்ளார்.

<<<<>>>>

இண்டிகோ நிறுவனம் உடனடியாக விமான சேவையை சீரமைக்க வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

நாடுமுழுவதும் நேற்றும், நேற்று முன்தினமும் 100க்கும் மேற்பட்ட இந்நிறுவனத்தின் விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டதையடுத்து பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இதையடுத்து நேற்று புதுடில்லியில் மத்திய சிவில்விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம் மோகன் நாயுடு, விமான நிறுவனத்தின் உயர் அதிகாரிகளுடன் அவசர கூட்டத்தை நடத்தினார்.

கடந்த சில நாட்களாக இண்டிகோ விமான நிறுவனம் சந்தித்து வரும் பெரும் அளவிலான விமான ரத்து மற்றும் தாமதங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந் நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து அமைச்சர் வெளிப்படையான அதிருப்தியை வெளிப்படுத்தியதோடு புதிய விமானப் பணியாளர் கடமை, நேர வரம்பு விதிகளை அமல்படுத்த போதுமான கால அவகாசம் இருந்தும், நிலைமையைச் சரியாக கையாளத் தவறியதை சுட்டிக்காட்டினார்.

உடனடியாக விமான சேவையை இயல்பு நிலைக்குத் திரும்பக் கொண்டுவர வேண்டும் என்றும் தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி விமானக் கட்டணங்களை உயர்த்தக் கூடாது என்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் கண்டிப்புடன் கூறினார்.

விமான ரத்துகள் அல்லது தாமதங்கள் குறித்துப் பயணிகளுக்கு முன்கூட்டியே தகவல் அளிக்க வேண்டும் என்றும் விமானம் ரத்து செய்யப்படும்போது, தேவைப்பட்டால் பயணிகளை விடுதிகளில் தங்கவைப்பது உட்பட அனைத்து அடிப்படை வசதிகளையும் தாமதமின்றி செய்து தரவேண்டும் என்றும் திரு. ராம் மோகன் நாயுடு அறிவுறுத்தினார்.

இந்நிலையில் விமான சேவை சீர்குலைந்ததற்கு திருத்தப்பட்ட புதிய விமானப் பணியாளர் கடமை, நேர வரம்பு விதிகளை அமல்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்கள் மற்றும் ஊழியர் திட்டமிடலில் ஏற்பட்ட பிழைகள் ஆகியவைதான் முக்கிய காரணம் என்று அரசிடம் விமான நிறுவனம் விளக்கமளித்துள்ளது.

<<<<>>>>

திருப்பரங்குன்றம் தீபத் தூணில் விளக்கு ஏற்ற வேண்டும் என்ற சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பு, வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், நீதிமன்றம் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்திய பின்னரும், திருப்பரங்குன்றம் மலை உச்சியில் மகா தீபம் ஏற்றும் விவகாரத்தில் மாநில அரசு தவறான போக்கை கையாண்டதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும், தீபத் தூணில் தீபம் ஏற்றவிமாமல் காவல்துறையைக் கொண்டு பொதுமக்களை மாநில அரசு தடுத்தது, கடுமையாகக் கண்டிக்கத்தக்கது என்றும் அவர் கூறியுள்ளார்.

மலை மீது தீபம் ஏற்றுவது தொடர்பான வழக்கில் அறநிலையத்துறை தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவை இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வும் தள்ளுபடி செய்து மாநில அரசுக்கு பாடம் கற்பித்துள்ளதாகவும் டாக்டர் முருகன் மேலும் கூறியுள்ளார்.

இந்நிலையில் நேற்று திருப்பரங்குன்ம் மலை உச்சியில் உயர்நீதிமன்ற உத்தரவுப்படி தீபம் ஏற்ற வலியுறுத்தி திருப்பரங்குன்றத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், மூத்த தலைவர் திரு. எச். ராஜா உள்ளிட்ட ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர்.

<<<<>>>>

ஒரே நாடு - ஒரே தேர்தல் குறித்து விவாதிப்பதற்காக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் கூட்டம் நேற்று புதுதில்லியில் பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி.பி. சவுத்ரி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியும், 23வது இந்தியச் சட்ட ஆணையத்தின் தலைவருமான தினேஷ் மகேஸ்வரியும் கலந்துகொண்டார்.

கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய திரு. பி.பி. சவுத்ரி, அனைத்துக் கோணங்களையும் ஆராய்ந்த பின்னரே குழுவானது அதன் பரிந்துரைகளை வழங்கும் என்று தெரிவித்தார்.

மேலும், அவர், "ஒரே நாடு ஒரே தேர்தல்" என்ற கருத்து, பொருளாதாரம் மற்றும் நிர்வாகம் தொடர்பான பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலம் நாட்டின் நலனுக்கு உகந்ததாக அமையும் என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

பண்ருட்டி முந்திரி, புளியங்குடி எலுமிச்சை உள்ளிட்ட 9 வேளாண் பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

சோழவந்தான் வெற்றிலை, விருதுநகர் சம்பா வற்றல், ராமநாதபுரம் சித்திரை கார் அரிசி, செட்டிகுளம் சின்ன வெங்காயம், தூயமல்லி அரிசி மற்றும் கவுந்தம்பாடி நாட்டுச் சர்க்கரை, திருச்சி உறையூர் பருத்தி சேலை ஆகிய 9 வேளாண் பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்தப் பொருட்களை சந்தைப்படுத்துதல் எளிதாக்கப்படுவதுடன், அவற்றின் தேவை மற்றும் ஏற்றுமதி அளவு அதிகரித்து பொருளாதார மேம்பாட்டுக்கு வழிவகுக்கும் என்று மாநில அரசு கூறியுள்ளது.

மேலும் விருதுநகர் அதலைக்காய், திண்டிவனம் பனிப்பயறு, நெல்லை அவுரி இலை உள்ளிட்ட 43 வேளாண் பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறும் முயற்சியில் மாநில அரசு ஈடுபட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

உலக மண்வள தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

ஆரோக்கியமான நகரங்களுக்கான ஆரோக்கியமான மண் என்பது இந்த ஆண்டுக்கான மையக் கருத்தாகும்.

நகர்ப்புற மண்ணின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக தருமபுரி மாவட்டத்தில் பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் மையத்தில் இன்று மண்வள விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

தெற்கு லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பின் ஆயுதக் கிடங்கு மீது இஸ்ரேல் நேற்று தாக்குதல் நடத்தியது.

**<<<<>>>>**

ஆப்பிரிக்க நாடுகளான ருவாண்டா - காங்கோ இடையே அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் முன்னிலையில் அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

**<<<<>>>>**

சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் தொடர்பாக தேசிய புலனாய்வு முகமை நேற்று நாடு முழுவதும் 22 இடங்களில் சோதனை நடத்தி 4 பேரை கைது செய்தது.

**<<<<>>>>**

திருச்சியில் 120 கோடி ரூபாய் செலவில் அமைய உள்ள வன உயிரியல் பூங்கா மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று மாநில அரசு கூறியுள்ளது.

**<<<<>>>>**

தெற்கு ரயில்வே சென்னை கோட்டத்தில் பொன்னேரிக்கு அருகே அனுப்பம்பட்டு கிராமத்தில் இரண்டாவது புதிய சரக்கு ரயில் முனையம் தொடங்கப்பட்டுள்ளது.

**<<<<>>>>**

சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் காவிரி ஒழுங்காற்றுக் குழு தலைவர் திரு. ஹால்தர் தலைமையிலான குழுவினர் நேற்று ஆய்வு செய்தனர்.

**<<<<>>>>**

காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் நடைபெற்று வரும் குடமுழுக்கு ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

<<<<>>>>

சென்னையில் மழையால் பாதிக்கப்பட்டுள்ள திரு.வி.க. நகர், பெரம்பூர், வியாசர்பாடி, மணலி, மாத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 6 லட்சம் நபர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டதாக மாநகராட்சி கூறியுள்ளது.

<<<<>>>>

நாட்டின் எரிசக்தி தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், இந்திய அணுசக்தி திட்டங்களில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தற்போது, மொத்தம் 13 புள்ளி 6 ஜிகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட 18 புதிய அணு உலைகள் கட்டுமானத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளதாக நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது தெரிவிக்கப்பட்டது.

<<<<>>>>

<u>*விளையாட்டுச் செய்திகள்*</u>

சென்னை சர்வதேச ஸ்குவாஷ் மகளிர் பிரிவு இறுதிப் போட்டியில் ஜோஷ்னா சின்னப்பா இன்று அனஹத் சிங்கை எதிர்கொள்கிறார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் வேலவன் செந்தில் குமார் - எகிப்தின் Adam Hawal-ஐ எதிர்கொள்கிறார்.

<<<<>>>>

கோவாவில் நடைபெற்று வரும் அகில இந்திய கால்பந்து சம்மேளன சூப்பர் கோப்பை கால்பந்து அரையிறுதிப் போட்டியில், ஈஸ்ட் பெங்கால் அணி 3-1 என்ற கோல் கணக்கில் பஞ்சாப் அணியை வென்றது.

மற்றொரு அரையிறுதிப் போட்டியில் கோவா அணி 2-1 என்ற கோல் கணக்கில் மும்பை அணியை வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

**<<<<>>>>**